பக்கங்கள்:10 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 07 சனிக்கிழமை 19.02.2022 கதிர் 106

## இது ரகசியம் அல்ல!

அமெரிக்காவின் மூத்த அரசியல் தலைவர் ஒருவர் அடுத்த மாதத்தில் கொழும்பு வரவிருக்கின்றார்.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் டொனால்ட் லூ ☞2

# பயங்கரவாதச் சட்டத்தை நீக்கக் கோரி சந்திரிகாவும் சம்பந்தனும் கையெழுத்து

## கொழும்பில் நேற்று நேரில் பெற்றார் சுமந்திரன்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரி அதற்கான மனுவில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் நேற்று கையெழுத்திட்டனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்பட்டு விசாரணை இன்றி நீண்டகாலமாகச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டு இருக்கின்றமையுடன் மிகவும் மோசமான சட்ட ஏற்பாடுகளைக் கொண்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தித் தமிழ்த் தேசியக் ☞2



# யுத்தத்தில் உயிரிழந்த உறவினர்களை தனிப்பட்ட ரீதியில் நினைவுகூர அனுமதி

## அவர்கள் ‘பயங்கரவாதி’யாக இருந்தாலும்



கொழும்பு, பெப்ரவரி. 19

பயங்கரவாதிகளை நினைவுகூர அனுமதியில்லை என்றும், எனினும், போரின்போது உறவினர் ஒருவர் உயிரிழந்திருப்பாராயின், தனிப்பட்ட ரீதியில் அவரை நினைவுகூர அனுமதி வழங்க முடியும் என்றும் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றனவா என்பது குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. ☞2

## மக்கள் போராட்டத்தைப் பொறுக்க முடியாமல் பிதற்றுகிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

### வடமராட்சி கிழக்கில் சுமந்திரன் எம்.பி. சாட்டையடி

தனக்கு எதிரான போராட்டத்தைத் தானே ஒழுங்கமைத்தவர் எனச் சொல்லும் ஒரே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி ☞2



## குரல் பதிவு கசிந்ததால் ‘மொட்டு’க்குள் பரபரப்பு





தெற்கு அரசியலில் சர்ச்சைக்குரிய அம்பலப்படுத்தலை வெகுவிரைவில் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா வெளியிடுவார் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து ☞2

## ஈஸ்டர் தாக்குதல் வழக்கு; ஹேமசிறி, பூஜித விடுவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நாமல் பலல்லே, ஆதித்திய பட்டபெத்திகே, மொஹமட் இடீன் உள்ளிட்ட மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாமினால் குறித்த ☞9

## யாழில் ஊடகத்துறை அமைச்சரின் சந்திப்புக்கு கறுப்புப்பட்டியுடன் சென்ற ஊடகவியலாளர்கள்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்,இ.கலையமுதன்)

ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கும் ஊடகவியலாளருக்கு இடையில் நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு ஊடகவியலாளர்கள் கறுப்புப்பட்டி அணிந்து சென்றனர். ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவர்களே மார்ச்சில் கொழும்பு வருகின்றார்.

ஜோபைடனின் நிர்வாகத்தில் இலங்கை தொடர்பான விடயங்களில் தீர்மானம் எடுக்கும் மூத்த அதிகாரி இவர்தான்.

கடந்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழு ஒன்று அமெரிக்கா சென்றிருந்தது தெரிந்ததே.

சுமந்திரனின் குழு அமெரிக்க சென்றிருந்த சமயத்தில், மேற்படி உதவிச் செயலாளர் டொனால்ட் லூ அமெரிக்காவில் நிற்காமல், வெளிநாடு சென்றிருக்கின்றார் என்றும் –

அதனால் சுமந்திரன் தலைமையிலான சட்ட நிபுணர் குழுவின் அமெரிக்க பயணம் பயனற்றது என்றும் –

சுமந்திரனுக்கு எதிரான குழுக்கள் பிரசாரம் செய்து கொண்டிருக்க, டொனால்ட் லூவோ நாடு திரும்பி சுமந்திரன் குழுவுடன் விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டமை நினைவு கொள்ளத்தக்கது.

இதற்கு முன்னரும் 2011ஆம் ஆண்டின் இறுதியிலும் இதேபோன்று சம்பந்தன், சுமந்திரன், மாவை, சுரேஷ் பிறேமசந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை அமெரிக்கத் தரப்பு வொஷிங்டனுக்கு அழைத்துப் பேச்சு நடத்தியது என்பதும் –

அதையடுத்து அடுத்த ஆண்டு – 2012இல் முற்பகுதியில் – கொழும்புக்கு விஜயம் செய்த அமெரிக்க உயரதிகாரிகள், இலங்கை தொடர்பான தமது கொள்கை – அணுகுமுறை – மாற்றத்தைக் கொழும்பில் வைத்துக் கோடிகாட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை விடயத்தை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தீவிரப்படுத்துவது என்ற அமெரிக்க முடிவு அப்போது கோடி காட்டப்பட்டது.

அதுபோலசரியாகப்பத்துஆண்டுகள் கழித்து 2021 இறுதியில் கூட்டமைப்புக் குழுவை வொஷிங்டனுக்கு அழைத்து அமெரிக்கா பேசியுள்ளது.

அதையடுத்து, 2022 முற்பகுதியில் அமெரிக்க உயர்நிலை அதிகாரியாக டொனால்ட் லூ கொழும்பு வருகின்றார்.

இப்போது இலங்கை தொடர்பாக ஜோ பைடனின் ஆட்சிப் பீடம் வகுத்துள்ள கொள்கை நிலைப்பாட்டைத் தமது இலங்கை விஜயத்தின் போது டொனால்ட் லூ கோடிகாட்டுவார் எனஎதிர்பார்க்கலாம்.

அமெரிக்காவுக்கான தங்களது சட்ட நிபுணர் குழுவின் விஜயத்தின் பெறுபேறுகளை – பலன்களை – பிரதிபலிப்புகளை – இரண்டு, மூன்று மாதங்களில் காணக்கூடியதாக இருக்கும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இரண்டு மாதங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

அப்படி பிரதிபலிப்பு கிட்டுவதற்கான காலம் நெருங்கி விட்டதா? டொனால்ட் லூவின் இலங்கை விஜயத்தின் போது அது வெளிப்படுமா என்பவைதான் இப்போதுள்ள கேள்வி.

அதற்கு விடை காண, அவரின் கொழும்பு விஜயம் பூர்த்தியாகும் வரை நாம் காத்திருக்க வேண்டியிருக்கும். பார்த்திருப்போம்.

– மின்னல் –

## யுத்தத்தில் உயிரிழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முந்தைய மனித உரிமைகள் ஆணைக்குழுக்கள் மற்றும் ஏனைய குழுக்களினது தீர்மானங்களின் மதிப்பாய்வு மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கை, உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டீ. நவாஸால் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

மனித உரிமைகள், சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் மற்றும் அது போன்ற கடுமையான குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் அல்லது ஏனைய குழுக்கள் கண்டறிந்த தகவல்கள் தொடர்பான விசாரணைகள், ஆராய்ச்சிகள் மற்றும் அறிக்கையிடல்கள் அல்லது உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக, ஜனாதிபதியால் 2021 ஜனவரி 21ஆம் திகதியன்று, உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டீ. நவாஸ் தலைமையிலான ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்த ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை, 2021 ஜூலை 21ஆம் திகதியன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

போருக்கு முகங்கொடுத்த மற்றும் அது தொடர்பான அனுபவங்களைக் கொண்ட யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வசிக்கும் 75 பேர் வழங்கிய சாட்சியங்களின் அடிப்படையிலான பரிந்துரைகள் அடங்கிய 107 பக்கங்களுடன் இந்த இரண்டாவது அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு கண்டறிந்த விடயங்களை உடன் விசாரித்து, அது தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யவோ அல்லது நட்டஈடு வழங்கவோ பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் தலைநிமிர அரசின் உதவி அவசியம் என்று ஆணைக்குழு முன் சாட்சியமளித்துள்ள நபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் ஆணைக்குழு தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாதிகளை நினைவுகூர அனுமதியில்லை என்றும், போரின்போது உறவினர் ஒருவர் உயிரிழந்திருப்பாராயின், தனிப்பட்ட ரீதியில் அவரை நினைவுகூர அனுமதி வழங்க முடியும் என்றும் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன், ஜூன் மாதத்துக்குள் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்க முடியும் என்று அதன் தலைவரும் உயர்நீதிமன்ற நீதியரசருமான ஏ.எச்.எம்.டீ.நவாஸ் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்வும் இதன்போது பங்கேற்றிருந்தார்.

## பயங்கரவாதச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கூட்டமைப்பினர் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அதற்கமைய கிராமங்கள் தோறும் குறித்த கையெழுத்துப் பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி அதற்கான மனுவில் கையெழுத்திட்டனர்.

இந்தக் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று நடைபெற்றது.

## மக்கள் போராட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்., வடமராட்சி கிழக்கு, கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினருடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

(விவரமான செய்தி 10ஆம் பக்கத்தில்....)

## குரல் பதிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரான நிமல் லான்சா, கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சுப் பதவியை வகிக்கின்றார்.

எனினும், அமைச்சின் செயலாளரின் தலையீடு, அரசியல் காரணிகள் உட்பட மேலும் சில விடயங்களை அடிப்படையாகக்கொண்டு குறித்த அமைச்சுப் பதவியைத் துறப்பதற்கு நிமல் லான்சா தயாராகிவிட்டார் எனவும், இதன் ஆரம்பகட்டமாக தனது பிரத்தியேக பணியாளர்களை அமைச்சிலிருந்து விலக்கியுள்ளார் எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இராஜிநாமாக் கடிதத்தை தயார் நிலையில் வைத்துள்ள நிமல் லான்சாவை சமரசப்படுத்தும் முயற்சியில் மொட்டு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

பஸில் ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவராகக் கருதப்படும் நிமல்லான்சா ஏன் இத்தகையதொரு நகர்வைக் கையாள்கின்றார் என்பது ஆளுங் கட்சியினருக்கு வியப்பாக உள்ளது. அண்மைக் காலமாக அரசின் செயற்பாடுகளையும் அவர் கடுமையாக விமர்சித்து வருகின்றார்.

நிமல் லான்சாவை சமரசப்படுத்தும் முயற்சி தோல்வி அடையும் பட்சத்தில், முக்கியமான சில விடயங்களை அம்பலப்படுத்திவிட்டு, அவர் பதவி துறப்பார் என்று தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவுக்கு, மற்றுமொரு இராஜாங்க அமைச்சரான சனத் நிஷாந்த அச்சுறுத்தல் விடுக்கும் குரல் பதிவு தற்போது இணைய ஊடகங்களில் வைரலாகியுள்ளன.

## யாழில் ஊடகத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய பகுதியிலுள்ள ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை, கொலை செய்யப்பட்டமை மற்றும் தாக்கப்பட்டமை தொடர்பில் இதுவரை நீதி கிடைக்காமையை எடுத்துக் காட்டும் முகமாகவே கலந்துரையாடலுக்கு யாழ். ஊடகவியலாளர்கள் கறுப்புப்பட்டி அணிந்து சென்றிருந்தனர்.

ஊடகவியலாளர்கள் கறுப்புப்பட்டி அணிந்திருந்ததை அவதானித்த அமைச்சர் டலஸ் அழகப்பெரும தானும் ஓர் ஊடகவியலாளனாக மூன்று பத்திரிகைகளில் கடமையாற்றினார் எனக் குறிப்பிட்டு ஊடகவியலாளர்களின்ஜனநாயகக் கோரிக்கைக்குத் தான் மதிப்பளிக்கிறார் எனத் தெரிவித்தார்.

அத்துடன் அவர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

**வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தனியார்நிறுவனம்ஒன்றிற்குபின்வரும் பதவிகள் கோரப்படுகின்றன.
1.சாரதி (Heavy Vehicle)
2.அலுவலக சுத்திகரிப்பாளர்.
**தொடர்பு எண் - 0777113333**
**தொடர்பு விலாசம் -**
**இலக்கம் 218, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**

**இறைச்சிக் கோழி விற்பனை**
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

**காணி விற்பனைக்கு**
அச்சுவேலி - பருத்தித்துறை வீதியில் 250m தூரத்தில் (அச்சுவேலி பொது வைத்தியசாலை அருகில்) 4½ பரப்பு கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 322 3229




யாழ்ப்பாணம் - நல்லூர்- வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால்- நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி -மன்னார் - வவுனியா - திருகோணமலை மூதூர் - கொழும்பு

POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

காலைக்கதிர் Kalaikkathir

# மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளரின் செயற்பாடுகள் குறித்து சபையில் கண்டனம்





மட்டக்களப்பு மாநகரசபையின் அமர்வில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் சபை அனுமதி பெறப்பட்டதோடு, சபைத் தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்படும் மாநகர ஆணையாளரின் செயற்பாடுகள் தொடர்பில் கண்டனமும் வெளியிடப்பட்டது.

மட்டக்களப்பு மாநகரசபையின் 57 ஆவது சபை அமர்வு கடந்த வியாழக்கிழமை மாநகர முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த அமர்வில் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட மாநகரசபை உறுப்பினர்கள், பதில் செயலாளர், கணக்காளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை நடப்பாண்டுக்காகப் புதிதாக அமைக்கப்பட்ட நிலையியற் குழுக்களின் தலைவர்கள் சபையில் அறிமுகப்படுத்தப்பட்டமையுடன், அவர்களின் எதிர் காலச் செயற்பாடுகள் தொடர்பிலான வெளிப்படுத்துகைகளும் இடம்பெற்றிருந்தன.

அந்தவகையில் கலைக் குழுவின் தலைவராக மா.சண்முகலிங்கம், சுகாதாரக் குழுவின் தலைவராக க.ரகுநாதன், வேலைக்குழுவின் தலைவராக இரா.அசோக், விளையாட்டுக் குழுவின் தலைவராக து.மதன், காணிக் குழுவின் தலைவராக வி.பூபாளரராஜா, நூலகக் குழுவின் தலைவராக ச.கமலரூபன், அனர்த்த முகாமைத்துவக் குழுவின் தலைவராக த.சிவானந்தராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் பெண்கள், சிறுவர்கள் பராமரிப்பு தொடர்பில் புதிதாக குழுவொன்றும் நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அன்றைய அமர்வு தொடர்பில் மாநகர முதல்வர் கருத்துத் தெரிவிக்கையில் –

அமர்வில் கடந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பிலும், இம்மாதம் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன், சில இறுக்கமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

எமது அபிவிருத்தி விடயங்களில் மாநகர ஆணையாளரின் தலையீடுகள் அதிகமாக இருந்ததன் காரணமாக அவரிடம் இருந்து மீளப்பெற்ற அதிகாரங்களை அடுத்த நிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்தோம்.

அத்துடன் கடந்த சபையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் அதிகாரத்தையும் அவரிடமிருந்து மீளப்பெற்றிருந்தோம். அதேபோல் கொடுப்பனவு சம்பந்தமான அங்கீகாரத்தையும் அவரிடமிருந்து மீளப்பெற்று பிரதி ஆணையாளருக்கு வழங்கியிருந்தோம்.

ஆனால் பிரதி ஆணையாளரும் மேற்படி விடயங்களைச் செய்வதற்கு முன்னர் ஆணையாளரிடம் ஒப்புதல் பெற்றுச் செய்கின்ற நிலைமை இருப்பதால் அவரிடமிருந்து எழுத்துமூல ஆவணம் பெறப்பட்டதும் அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தீர்மானித்துள்ளோம்.

அதேபோல உலக வங்கியின் நிதி மூலம் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியில் மட்டக்களப்பு பொதுச் சந்தையின் மேல் பகுதியில் சோலர் திட்டத்தை மேற்கொண்டு மாநகரசபைக்கு வருமானம் ஈட்டக்கூடிய தீர்மானத்துக்கு மாநகரசபையில் அங்கீகாரம் பெற்றிருக்கின்றோம்.

இதன் மூலம் மாநகரசபைக்கு மாதாந்தம் இரண்டு லட்சம் ரூபா வருமானம் கிடைக்கக்கூடியதாக இருக்கும். இதற்கு மேலதிகமாக உலக வங்கியின் நிதியின் மூலம் பொதுச் சந்தையின் மேற்பகுதியில் அமையப்பெற்றுள்ள மீன், இறைச்சிக் கடைகளை கீழ்ப்பகுதிக்கு கொண்டு வருவதற்குரிய செயற்திட்டத்துக்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இதேபோன்று மட்டக்களப்பு நகருக்குள் பல்போசன சாலை கொண்ட அமைப்பொன்றை உருவாக்கவுள்ளோம். இதன் மூலம் உள்ளூர் முயற்சியாளர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கக் கூடிய விதத்திலும் நகர்ப்புற மக்களுக்கு இலகுவில் உணவுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்திலும் 25 லட்சம் ரூபா நிதியில் இந்தத் திட்டம் அமையப்பெறவுள்ளது.

அத்துடன், உலக வங்கியின் நிதி மூலம் கொக்குவில் மற்றும் நாவற்குடா பொதுச் சந்தைகளைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் சரியான முறையில் கேள்வி கோரல்கள் இடம்பெறாததன் காரணத்தால் மீண்டும் இவ்வாரம் அந்தக் கேள்வி கோரல் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதற்கும் மேலதிகமாக கடந்த வருடம் எங்களால் முன்னெடுக்கப்பட்ட சடலம் எரிக்கும் நிலையம் மற்றும் கலாசார மண்டப விடயம் தொடர்பில் தொடர்ந்தும் இழுபறி நிலை இருப்பதால் எமது பொறியியலாளர் பிரிவினால் ஒழுங்கு முறையான ஒத்துழைப்பு கிடைக்காமமையாலும், தங்களது இயலாமை தொடர்பில் அவர்களின் எழுத்து மூல ஆவணத்தைக் கருத்திற் கொண்டும் நாங்கள் இதனை வெளிவளத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்குக் கேள்விக் கோரல் மேற்கொண்டு இதற்காக ஆலோசனைக் குழுவொன்றையும் உருவாக்கி படவரைஞர்களின் உதவியுடன் முழு கட்டுமான வேலைகளையும் அவர்கள் மூலமாக அமுல்படுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக கடந்த வருடத்தில் தீர்மானிக்கப்பட்ட மாவட்ட எல்லை வளைவுக் கோபுர வேலைகளையும் இதே குழுவின் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வெபர் மைதானத்தில் எவ்வித தொழில்நுட்ப ரீதியான ஆய்வும், அறிவும் இல்லாமல் விளையாட்டு வீரர்களுக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்ட குப்பைகளைக் கொட்டி பூமரம் நடும் செயற்திட்டத்துக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், அதனை அப்புறப்படுத்தவும் விளையாட்டு வீரர்களுக்கு அந்த இடத்தைப் பாவனைக்கு வழங்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்த இடம் தான் விளையாட்டு வீரர்கள் உடல் உஷ்ணப்படுத்தும் இடமாகவும், பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும் போது இல்ல அமைப்பு வேலைப்பாடுகளை மேற்கொள்ளும் இடமாகவும் இருக்கின்றது.

இதற்கு மேலதிகமாக ஊறணிச் சந்தியில் இருந்த கருவேல மரங்களை எவ்வித ஆய்வும் இன்றி அப்புறப்படுத்தியிருப்பதாக முறைப்பாடு கிடைத்தது.

கருவேல மரம் சூழலுக்குப் பாதிப்பு என்றாலும் அது தற்போது இருந்த இடம் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தாத இடம்.

ஆனால், தற்போது அதனை அகற்றுவதாகக் கூறி அதனை குப்பை மேட்டில் இட்டதால் அங்கிருந்து அதன் விதைகள் அதனைச் சூழவுள்ள பிரதேசத்திற்குப் பரவும், அதிலிருந்து கூட்டெரு தயாரிக்கும் நிலையத்தில் சேரும், அந்தக் கூட்டெரு மூலம் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் பரவும் வழிவகைகளையே ஆணையாளர் தொழில்நுட்ப ஆலோசனையின்றி செயற்படுத்தியுள்ளார்.

இந்த விடயத்துக்கும் கண்டனத் தீர்மானமொன்று சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

# ஊழல்மிகு அரசை நிராகரிக்க மக்கள் விரைவில் ஒன்றுபடுவர்!

## ரஞ்சித் மத்தும பண்டார நம்பிக்கை



இந்த நாடு அதளபாதாளத்தை நோக்கி நகர்வதாகவும் மக்கள் நாளாந்த வாழ்க்கையைக் கூட நடத்த முடியாமல் திண்டாடுகின்றனர் எனவும் இதன் காரணமாக அதிகமான ஊழல்மிகு அரசாங்கத்தை நிராகரிக்க மக்கள் விரைவில் ஒன்றுபடுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் அம்பாறை மாவட்டத்துக்கான விஜயமொன்றை மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களுக்கான இணைப்பாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட இளைஞர்கள் அமைப்பின் இணைச் செயலாளருமான வினோகாந்தின் அழைப்பின் பேரில் ஆலையடிவேம்பு பிரதேசத்துக்கும் அவர்கள் சென்றுள்ளனர்.

இந்த விஜயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன மற்றும் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரதாச கலப்பதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா இல்ல ஒன்றுகூடல் மண்டபத்துக்கு வருகை தந்த அவர்கள் அங்கு இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால அரசியல் நிலைப்பாடு மற்றும் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசத்துக்கென ஓர் அரசியல் தலைவரை உருவாக்குகின்றமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பிரதேச சபை உறுப்பினர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அங்கத்தவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தமிழ் பிரதேசங்களுக்கான இணைப்பாளர் வினோகாந்தால் முன்வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தமது கட்சியால் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஆலையடிவேம்பு திருக்கோவில் பிரதேசத்தில் நீர்ப்பாய்ச்சல் இன்றி கைவிடப்பட்டுள்ள 25 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சும் வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படும்.

மேலும், பசுப்பால் உற்பத்தியில் கவனம் செலுத்தப்படுவதுடன் கைவிடப்பட்டுள்ள ஆடைத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் எனவும் இதன்போது கருத்து தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் மீனின் வயிற்றில் பொருள்கள்!

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஒருவர் கொள்வனவு செய்த மீன் ஒன்றின் வயிற்றில் இருந்து ஊசி மருந்து செலுத்தும் சிரின்ஜ், பிளாஸ்டிக் உட்பட பல பொருள்கள் காணப்பட்டமை தொடர்பான காணொலி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது.

மீன்களில் இருந்து துர்நாற்றம் வீசியதால், மீனை வெட்டுவதை காணொலியில் பதிவு செய்தேன் என இந்த மீனை உணவுக்காக கொள்வனவு செய்த மட்டக்களப்பை சேர்ந்தவர் கூறியுள்ளார்.

மீனின் வயிற்றில் இருந்து உலோகப்பொருள்கள், சிரின்ஜ், பிளாஸ்டிக் உள்ளிட்ட பொருள்கள் அகற்றப்படுகின்றமை காணொலி காட்சியில் காணப்படுகிறது.

இப்படியான ஆரோக்கியமற்ற மீன்களை உணவுக்கு எடுப்பதால், பொதுமக்கள் புற்றுநோய் போன்ற பல நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர் என சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் முகாமையாளர் டோர்னி பிரதீப் தெரிவித்துள்ளார்.

மனிதர்கள் பயன்படுத்தும் பிளாஸ்டிக் உட்பட மக்காத பொருள்கள் பாதுகாப்பின்றி, கடல் உட்பட சுற்றாடலுக்குள் வீசப்படுவதால், மீன்கள், வன விலங்குகள் உட்பட பல உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.

அத்துடன் கோழி, மீன், இறைச்சி போன்றவற்றை உணவுக்கு பயன்படுத்தும் மனிதர்களும் இதன் மூலம் பல உடல் நல தீங்குகள் ஏற்படுவதுடன் நோய்களுக்கும் உள்ளாகி வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தீர்ப்பு உணர்ந்தும் நியாயம்

பரபரப்பாக நடைபெற்ற ஒரு வழக்கு விசாரணை, எதிர்பாராத விதத்தில் திடீரென முடிவுக்கு வந்திருக்கின்றது.

2019 ஏப்ரலில் ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் வெடிகுண்டுத் தாக்குதல்களுக்கான சதியைத் தடுத்து நிறுத்தத் தவறினர் என்ற அடிப்படையில் அப்போதைய பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் இருந்து நீண்ட விசாரணையின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்தத் தொடர்குண்டுத் தாக்குதலில் 260 பேர் வரை உயிரிழந்திருந்தனர். ஐநூறுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

இந்த வழக்கில் ஹேமசிறி பெர்னாண்டோ, பூஜித் சுயசுந்தர ஆகியோருக்கு கிரிமினல் கவனயீனம் உட்பட 855 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

நீதிபதிகள் நாமல் பலல்ல, ஆதித்ய பட்டபெண்டிய, மொஹமட் இஸ்ஸடீன் ஆகியோரை கொண்ட 'ட்ரயல் – அட்பார்' ஆயமே இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கின்றது.

குற்றம் சுமத்தப்பட்ட இருவருக்கும் எதிராக அரச தரப்பு முன்வைத்த சாட்சியங்களைப் பதிவு செய்த நீதிமன்றம், எதிரித் தரப்பு சாட்சியங்களை விசாரணைக்கு அழைக்காமலேயே – அதற்கு முன்னரே – தன்பாட்டில் வழக்கை முடித்து, மேற்கொண்டு அதனை நடத்துவதற்கு இடமில்லை எனத் தீர்மானித்து தீர்ப்பளித்திருக்கின்றது. முன்னாள் பாதுகாப்புச் செயலாளரையும், பொலிஸ் மா அதிபரையும் மன்று விடுவித்திருக்கின்றது.

இது மூன்று நீதியரசர்களைக் கொண் 'ட்ரயல் அட்பார்' மன்றின் தீர்ப்பு. ஆதலால் இதற்கு எதிரான மேன்முறையீட்டை அரசுத் தரப்பு செய்வது என்றாலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் செய்ய முடியாது. அதையும் தாண்டி உயர் நீதிமன்றத்தில்தான் செய்ய முடியும்.

அரசுத் தரப்பின் வாதத்தை மட்டும் – குற்றம் சுமத்துவதற்கான சாட்சியங்களை மட்டுமே – கவனத்தில் எடுத்த நிலையில் – எதிரித் தரப்பு சாட்சியங்களுக்கு இடமளிக்காமலேயே நேரத்துடன் விடுதலைத் தீர்ப்பு முடிவுக்குத் தன்பாட்டில் 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றம் வந்திருப்பதால், அதற்கு எதிராக அரசுத் தரப்பு இன்னொரு தடவை மேன்முறையீட்டுக்குப் போய், உயர்நீதிமன்றத்திடமும் பாடம் படிக்க முயலாது என்று நம்பலாம்.

மேற்படி தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பிலான முன்னெச்சரிக்கை உளவுத் தகவல்களை நேரத்துடன் பெற்றிருந்தும், அத்தாக்குதலைத் தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது இந்த வழக்கின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட பிரதான குற்றச்சாட்டின் அடிப்படை.

தாக்குதல் சமயத்தில் அரச புலனாய்வுத்துறையின் தலைவராக இருந்தவர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலாந்த ஜெயவர்த்தனா. அப்போதைய இந்த உளவுத் தகவல்களையெல்லாம் கையாண்டவர் அவர்தான். அவரே அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறசேனவுடன் உளவுத் தகவல் விடயங்கள், பாதுகாப்பு விவகாரங்களில் மிக நெருக்கமாக இருந்தவர்.

கிரிமினல் கவனயீன வழக்கில் அவரே பிரதான எதிரியாக்கப்பட வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வெளிப்படையாகக் குற்றம் சுமத்தியிருந்தார். ஆனால் இந்த வழக்கில், அவரைக் காப்பாற்றி, அரச சாட்சியாக மாற்றி, மேற்படி இருவருக்கும் – பூஜித் ஜயசுந்தர மற்றும் ஹேமசிறி பெர்னாண்டோ இருவருக்கும் – எதிரான சாட்சியாக அவரை நிறுத்தியது அரசு.

தொடர் குண்டுத் தாக்குதல் நடத்தியோருக்கோ, அதற்கு சூத்திரதாரியாக பின்புலத்தில் இருந்தவர்களுக்கோ எதிராக எந்த முறையான விசாரணைகளையும் நடத்தி, அவர்களை சட்டத்தின் முன் கொண்டு வராத அரசுத் தரப்பு, தாக்குதலைத் தடுக்கத் தவறினர் என சில அதிகாரிகள் மீது குற்றச்சாட் டைச் சுமத்தி தப்பப் பார்த்தது. அந்த முயற்சிக்கு முகத்தில் அடிகொடுத்தால் போல வந்திருக்கின்றது இந்தத் தீர்ப்பு.

தும்பை விட்டு வாலைப் பிடித்தால் இப்படித்தானாகும்.

# ஆளும் தரப்பு பிரதிநிதிகளுக்கு இடையே போட்டி தடைப்படுகின்றன பிரதேச அபிவிருத்திப் பணிகள்!

### வலி.தென்மேற்கு தவிசாளர் ஜெபநேசன் விசனம்




ஆளும் தரப்பிலுள்ள இரு மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையேயுள்ள போட்டித்தன்மை காரணமாக அபிவிருத்தித்திட்டங்கள் தடை ஏற்படுத்தப்படுவதுடன் உள்ளூராட்சி மன்றங்களால் சில திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலையும் காணப்படுகிறது என வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் மற்றும் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு -

உள்ளூராட்சி மன்ற அதிகாரங்களுக்குட்பட்டு எமது பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை நாங்கள் செய்து வருகின்றோம்.

அவ்வாறான திட்டங்களைச் செய்து வருகின்ற போது இன்றைய அரசாங்கத்தில் அங்கத்து வம் வகிக்கின்ற இரண்டு பிரதிநிதிகளுக்கு இடையில் போட்டி நிலை காரணமாகப் பல பிரச்சினைகளை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

குறிப்பாக புங்குடுதீவில் அமைக்கப்படவுள்ள ஆர்.ஓ .திட்டத்தை கல்லுண்டாய் வெளிக்கு மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன எனவும் அது தற்சமயம் புங்குடுதீவுக்கே அமைக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்த விடயத்தில் புங்குடுதீவுக்கே அதனை வழங்குவதற்கானதிட்டங்கள்உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் அதனை கல்லுண்டாய் வெளிக்கு மாற்றக் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதனால் அந்தத் திட்டத்தை எங்கு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பாகக் குழப்ப நிலை காணப்பட்டு இறுதியாக புங்குடுதீவிற்கே வழங்கவேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது.

இது தேவையற்ற குழப்பமாகவே தோன்றியது. இருவருக்குமிடையில் உள்ள போட்டித்தன்மையாலேயே இது உருவானது.

இது மட்டுமன்றி மானிப்பாய்- காரைநகர் வீதி காப்பெற் வீதியாகப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அந்த வீதிகளிலுள்ள கால்வாய்கள், மதகுகள் புனரமைக்கப்படாமலே காப்பெற் போடுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது எங்களாலும் பொதுமக்களாலும் இந்த விடயம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மற்றும் உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதற்குப் பின்னர் மேற்படி வீதி மானிப்பாய் பகுதி அபிவிருத்திப் பணியில் கால தாமதம் ஏற்படுத்தப்படுகின்றன.

இது ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாகவே நாங்கள் உணருகின்றோம். இவ்வாறாக பல திட்டங்கள் முறையற்ற விதத்திலும் திட்டமிடப்படாமலும் இடம்பெற்று வருகின்றன.

இவை தொடர்பில் உரிய இடங்களுக்கு நாங்கள் முறையிட்டுள்ளோம். இதுவரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. நாங்கள் சிறிது காலம் பார்த்துவிட்டு ஜனநாயக ரீதியான போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தயாராகி வருகின்றோம். - என்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள கொழும்பு மாநகர சபையின் தவிசாளர் ரோஷ் சேனநாயக்க தலைமையிலான குழுவினர் எமது பிரதேசத்துக்கு வருகை தந்து எங்களால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் பார்வையிடவுள்ளமையுடன் எத்தகைய திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பாகவும் நாங்கள் கலந்துரையாடவுள்ளோம் எனத் தெரிவித்தார்கள்.

இந்தச் சந்திப்பில் தவிசாளருடன் உறுப்பினர்களான ரமணன் மற்றும் ஜிப்ரிக்கோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் விபத்து; முதியவர் படுகாயம்



வவுனியா குருமன்காட்டில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. சைக்கிளுடன் கப் ரக வாகனம் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும் கப் ரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணை வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதேவேளை கப் ரக வாகனத்தை பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸார் கொண்டு சென்ற வேளை குருமன்காடு ரயில் கடவை பகுதியில் மீண்டும் விபத்துக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள்களுடன் இளைஞர் திருமலையில் கைது

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்பே பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள்களுடன் இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளோம் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்பே மீன்பிடி துறைமுகத்தில் ஹெரோயின் போதைப்பொருளை இளைஞரொருவர் வைத்திருக்கிறார் எனப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலை அடுத்து மேற்படி இளைஞரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 4 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை- மிகிந்தபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம் எனவும் விசாரணையின் பின்னர் திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# மன்னார் மாவட்டத்தில் கடந்த 16 நாள்களில் 377 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம்!



## பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் விநோதன் தகவல்

மன்னார் மாவட்டத்தில் கடந்த 16 நாள்களில் 377 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த வருடம் 2022 ஆம் ஆண்டில் தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 578 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடந்த வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தில் புதன் கிழமை மேலும் புதிதாக 12 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் பெப்ரவரி மாதத்தில் தற்போது வரை 377 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடம் மொத்தமாக 578 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனாத் தொற்றால் பெப்ரவரி மாதம் 3 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் 39 பேர் மரணித்துள்ளனர். ஒமிக்ரோன் அலை பரவல் தொடங்கியதில் இருந்து இறந்தவர்களின் எண்ணிக்கை மன்னார் மாவட்டத்தில் 3 ஆகும். ஒவ்வொரு 120 நோயாளர்களுக்கும் ஒருவர் என்ற வகையில் இறப்பு இடம்பெற்றுள்ளது.

இது டெல்டா அலை பரவும் போது ஏற்பட்ட இறப்புகளுடன் ஒப்பிடும் போது குறைவாக இருந்தாலும், இதனைக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஓர் எண்ணிக்கையாகக் காணப்படுகின்றது. எனவே பொதுமக்கள் தமது 2 ஆவது தடுப்பூசியை பெற்றுக் கொண்ட பின்னர் மூன்று மாதங்கள் நிறைவடைந்து இருந்தால் கட்டாயமாக 3 ஆவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனைய சுகாதார வழிமுறைகளையும் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பாடசாலை மாணவர்களுக்குத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இதுவரை மொத்தமாக 12 ஆயிரத்து 643 மாணவர்களுக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான 2 ஆவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் கடந்த செவ் வாய்க்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 16 தொடக்கம் 20 வயதுடைய மாணவர்களுக்கு 2 ஆவது தடுப் பூசி வழங்கப்படுகின்றது.

புதன்கிழமை மாலை வரை 799 மாணவர்கள் 2ஆவது தடுப்பூசியை செலுத்திக் கொண்டுள்ளனர். எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் 2 ஆவது தடுப்பூசியை முழுமையாக வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலை தவணை ஆரம்பிக்கப்படும்போது 16 தொடக்கம் 20 வயதுடைய மாணவர்கள் அனைவரும் 2 ஆவது தடுப்பூசியைப் பெற்றிருக்க வேண்டும் என்பது எமது நோக்கமாக உள்ளது.

மேலும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட மக்களின் சதவீதம் மன்னார் மாவட்டத்தில் 39 சதவீதமாகக் காணப்படுகின்றது. எதிர்வரும் நாள்களில் மேற்படி தடுப்பூசியை வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரையில் 59.3 சதவீதமானவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளார்கள். மார்ச் முதலாம் திகதி இடம்பெற உள்ள திருக்கேதீஸ்வர சிவராத்திரி நிகழ்வில் கலந்து கொள்ள உள்ள பக்தர்கள் முழுமையாகத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். 2 ஆவது தடுப்பூசி பெற்றிருந்து 3 மாதங்கள் நிறைவடைந்திருந்தால் 3 ஆவது தடுப்பூசியை பெற்றிருக்க வேண்டும். இவர்கள் மாத்திரமே திருக்கேதீஸ்வர சிவராத்திரி நிகழ்வில் கலந்துகொள்ள முடியும். எனவே, திருவிழாவில் கலந்துகொள்ள எதிர்பார்த்துள்ள பக்தர்கள் தமது 3 ஆவது அல்லது பூஸ்டர் தடுப்பூசியை பெற்று 2 வாரங்கள் நிறைவடைந்துள்ளதை உறுதிசெய்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாடு செல்லும் இலங்கையருக்கு நான்காவது தடுப்பூசியும் ஏற்றப்படும்

## வைத்தியர் அசேல குணவர்தன அறிவிப்பு



வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு, அவர்கள் செல்லும் நாட்டின் தேவைக்கு ஏற்ப நான்காவது டோஸ் கொரோனாத் தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். உயர்கல்விக்காக ஆஸ்திரேலியாவுக்கு சென்ற மாணவர் குழுவொன்றுக்கு கடந்த காலங்களில் இவ்வாறான விசேட தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசி மற்றும் தடுப்பூசி திட்டம் தொடர்பாகவும் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்த வேண்டாம்!

## பொலிஸாருக்கு ஜனாதிபதி பணிப்புரை



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்த வேண்டாம் என்றும் பயங்கரவாதத்துடன் தெளிவான தொடர்புகள் இருந்தால் மாத்திரம் பயன்படுத்துமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை கைவிடுவதற்கு பயங்கரவாத தடைச் சட்டத்தைத் தவறாக பயன்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி பொலிஸாரிடம் கூறியுள்ளார் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாகப் பொறுப்பற்ற பயன்பாடு நிறுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் அது நடக்கிறதா இல்லையா என்று ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார்ப்போம் என்றும் வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற உள்ளூர் சிவில் சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் பீரிஸ் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

இதன்போது, சிவில் சமூகம் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் பொலிஸார் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றமை தொடர்பாக வலுவான எதிர்ப்புகளை வெளிப்படுத்தினர்.

அத்தோடு, பயங்கரவாத தடைச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்களை வெளிவிவகார அமைச்சர் வலுவாக ஆதரித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள் ஒன்றும் புதிதல்ல என்று சிலர் எடுத்துள்ள நிலைப்பாட்டை அவர் நிராகரித்தார்.

சட்ட மா அதிபர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்காத போதிலும், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை பயங்கரவாதத் தடைச் சட்டம் தடுத்ததாக ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்குவதற்கு சட்டத்தரணிகள் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# திருமலை எண்ணெய்க் குதங்களை வெளிநாட்டவருக்கு வழங்குவதற்கு வெகுஜன ஒற்றுமை அமைப்பு எதிர்ப்பு!

திருகோணமலை வெகுஜன ஒற்றுமை அமைப்பினர் திருகோணமலை எண்ணெய்க் குதங்களை வெளிநாட்டவருக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத்தெரிவித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மஹஜர் ஒன்றை கடந்த வியாழக்கிழமை காலை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்திடம் கையளித்தனர்.

சமயத் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்தச் செயற்பாட்டில் களனிப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கபுகொல்லாவே ஆனந்த கீர்த்திதேரர், திருகோணமலை சீனக்குடா பங்குத்தந்தை அருட்தந்தை ஜோஜ் திசானாயக்க மற்றும் பலர் ஒன்றிணைந்து தமது கருத்துக்கள் அடங்கிய மஹஜர் ஒனறை ஆளுநரிடம் கையளித்தனர்.

திருகோணமலைக்குச் சொந்தமான சொத்துக்களை வெளிநாட்டவருக்கு வழங்குவதை திருகோணமலை வாழ் மக்கள் ஒன்றுபட்டு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் எனக் கருத்து தெரிவித்த அருட்தந்தை, பொதுமக்கள் நாட்டின் அபிவிருத்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் அல்லர், மாறாக முறைகேடான அபிவிருத்தி திட்டங்களை வன்மையாகக் கண்டிக்கின்றனர் எனவும் தெரிவித்தனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 285

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 721.தமிழ் மக்களின் அரசியலில் சுந்தரலிங்கத்தின் வகிபாகம் என்ன?

தான் நாடாளுமன்றத்தில் வவுனியாவின் அங்கத்தினரான இருந்த 1955 ஆம் ஆண்டு காலத்திலிருந்தே ஒரு மனிதனின் (தமிழ் மகனின்) அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுமாயின், அவை பாதுகாக்கப்படாவிடின், வேறொரு வழியுமற்ற நிலையில் அந்த மனிதன் (தமிழ் மகன்) கொடுங்கோன்மைக்கும் அடக்குமுறைக்கும் எதிராக எது விதத்திலும் போராடலாம் என்ற ஐ.நாவின் மனித உரிமை சட்டங்களின் சரத்துக்களை நாடாளுமன்றத்திலும் பொதுவெளியிலும் ஆணித்தரமாகப் பேசியவர். 'அடங்காத் தமிழர் முன்னணி' எனக் கட்சி அமைத்துக் கொண்டு அதனைச் செயலிலும் காட்டியவர். உரும்பிராயில் பிறந்து வளர்ந்து பின், கொழும்பில் சிங்கள மேல் அதிகார வட்டங்களுடன் – சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். பொன் அருணாசலம், முத்துக்குமாரசாமி போன்றோர் மாதிரி – இணைந்து பழகி ஒரு ஜனநாயக இலங்கையை உருவாக்க முயன்



சட்டமா அதிபர், பதில் பிரதம நீதியரசர், பதில் கவர்னர் ஜெனரல் பதவிகளை வகித்த ஸி. நாகலிங்கம்

றாரானாலும், பின்னர் வவுனியாவில் "லிங்கம் தோட்டம்' என்று வீடமைத்து அங்கேயே குடியிருந்து அரசியல் செய்தார்.

வவுனியாவின் குடியேற்றங்கள் முறியடிக்கப்பட வேண்டுமென்று இடைக்காடர், ராஜதுரை போன்று ஆளுமை மிக்க தமிழ் அதிகாரிகளை வவுனியாவில் அமர்த்தித் தமிழரின் குடியேற்றத் திட்டங்களுக்காகப் பல காணிகளை விநியோகிக்கத் தமிழ் அரசு அதிகாரிகளை நிர்ப்பந்தித்தமை மட்டுமல்லாமல், தான் தனது பெயரில் பல தனியார் காணிகளை வாங்கி அதில் தமிழ் மக்களை குடியேற்றினார்.

1956 இல் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாநில மாநாடு நடந்த போது – அதை தாக்குவதற்காக காடையர்கள் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து வருகிறார்கள் என்றபோது – வெகுண்டெழுந்து, தமிழ் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என அந்தப் பகுதியிலிருந்த விவசாயிகளின் துவக்குகளையும் பெற்று, துணிச்சலான இளைஞர்களையும் திரட்டி, எல்லைப் புறங்களில் காவலுக்கு வைத்து, மேலும் சிலருடன் தானும் சேர்ந்து துவக்குகளுடன் வவுனியாவின் நகர்ப்பகுதியில் நின்றவர்.

அது போலவே 1958 இல் இனவரக் காலங்களில் அதேமாதிரி மக்களைத் திரட்டி பதவியா, மதவாச்சி போன்ற எல்லைக் கிராமங்களில் இருந்து எழுந்த அச்சுறுத்தல்காரர்களை விரட்டியடித்தார். செட்டிகுளத்தில் எப்படி நாலு தமிழர்கள் 300 இற்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்களை முன்னேற விடாது தடுத்து நிறுத்தினார்கள் என்பதையும், தாமே அதற்குப் பொறுப்பு நின்று ஒழுங்கு படுத்தினார் எனவும், அது தங்களைப் பாதுகாக்க அவர்களினதும் அவர்களது பிரதிநிதியான தனது கடமையும் கூட, அது தனது உரிமை என பண்டாரநாயக்காவின் அரசுக்கு நேரடியாக தெரிவித்தவர். 'அடங்காத் தமிழர் முன்னணி'யை 1958 கலவரங்களின் பின் 'ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி'யாக (Eyla Thamilar Ottumai Munnani) மாற்றி, தமிழ் மக்கள் போராட்டங்களினால் தியாகங்கள் செய்யாது, சத்தியாக்கிரகம், அகிம்சை என்று பேசிக் கொண்டிருந்தால் தமிழீழம் அழிவதைத் தான் காண்பார்கள் எனப் பிரச்சாரங்கள் செய்தவர்.

ஆக, 1958 காலங்களிலேயே தனித் தமிழீழத்தைக் கோரியவர் சுந்தரலிங்கம். ஆனால் அரசியல் காற்றுப் பலமாக செல்வநாயகத்தின் பக்கம் வீசியதால் அவர் பேசுவது விதண்டாவாதம், யதார்த்தமற்றது எனவும், அவரது தனிப்பட்ட முரண்பாடுகள் பெரிதாக்கப்பட்டு, அரசியலில் கருவேப்பிலையாகப் பார்க்கப்பட்டார்.

### 722.அவரிலிருந்த முரண்பாடுகள் என்ன?

அவர் மிக எளிமையான குடும்பத்தில் பிறந்தவர். அவரது தாயார் மிகுந்த கஷ்டங்களுக்கிடையே தனது ஐந்து ஆண் மக்களையும் படிப்பித்து, அவர்கள் தங்களது சொந்த முயற்சியில் மதிப்பும் பெருமைகளும் அடைந்தார்கள்.

அவரது மூத்த தமையன் நாகலிங்கம் சட்டத்துறையில் ராணி வக்கீலாக உயர்ந்து பின் பிரதம நீதியரசராக இருந்தவர். இலங்கை சுதந்திரம் பெற்றபோது, ஒலிவர் குணதிலகா முதலாவது நிரந்தர தேசாதிபதியாக நியமனம் பெறும்வரைக்கும் பதில் தேசாதிபதியாகக் கடமையாற்றியவர்.

சுந்தரலிங்கம் லண்டன் சர்வகலாசாலைகளில் பல பட்டங்கள் பல பிரிவுகளில் பெற்றாலும், சட்டத்தரணியாகவும் கணிதத்தில் மிகவும் பெயர் வாய்ந்த கலாநிதியாகவும் பல்கலைக்கழகங்களில் பணியாற்றியவர். மகாராணியாக தற்சமயம் இருக்கும் எலிசபெத் அரசி கணித பாடத்தை மாணவியாக அவரிடம் படித்தமையால் அவர் சுந்தரலிங்கத்தைப் பெரிதும் மதித்தார். ஆகவே அவர் பட்டம் சூட்டியபோது இலங்கையில் இருந்து இருவருக்கு அழைப்பிதழ் இருந்தது. ஒன்று நாட்டின் பிரதமருக்கு. மற்றது சுந்தரலிங்கத்துக்கு. பட்டாபிகேத்தின் முடிவில் நடந்த விருந்துபசாரத்துக்கு சுந்தரலிங்கம் மட்டுமே அழைக்கப்பட்டார். இலங்கையின் பிரதமருக்கே அந்த விருந்துக்கு அழைப்புக் கொடுக்கப்படவில்லை. ஆக, சுந்தரலிங்கத்துக்கு இந்த மரியாதைகளின் நிமித்தம் மகாராணியாரை நேரடியாகவே அணுகும் தொடர்புகளும் அவர் மூலம் அவரது உயரதிகாரிகளின் அனுசரணைகளும் இருந்தன.

பின்னாளில் சேர்.பொன்னம்பலம் இராமநாதன், அருணாசலம், முத்துக்குமாரசாமி போன்றவர்கள் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டு நிலைமையை உணர்ந்து தமிழ் மட்டத்தில் இயங்கியமை போல, இவரும் தனக்கு இலங்கை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவி தரப்படாமல் அந்த நியமனம் வேறொருவருக்கு கொடுக்கப்பட்டதில் சிங்கள தலைவர்களின் உறவுகளை முறித்து தமிழ் வட்டத்தினுள் நுழைந்தார்.

அவரது எல்லா சகோதரர்களுமே தங்களது இளமை வாழ்வை மறவாது, சமுதாயப் பணிகளில் ஈடுபட்டமையுடன் இரக்க சிந்தனையுள்ளவர்களாகவும் இருந்தார்கள்.

சுந்தரலிங்கமும் அவரது சகோதரர் ராணி வக்கீலான தியாகலிங்கமும் கோவில் பணிகளில் ஈடுபட்டவர்கள்.

ஆனால் அவற்றில் கூட சுந்தரலிங்கம் சகோதரனுடனேயே முரண்பட்டு ஒருவர் ஆலயங்களுக்குள் சாதிப் பிரவேசத்தை ஆதரிக்க, இவரோ எதிர்ப்புக்கள் தெரிவித்து, கோவில்களின் முன் சன்னதமாடினார்.

இவற்றால், பொது வெளிகளிலேயே தியாகலிங்கம் தனது சகோதரனின் போக்குகள் முட்டாள் தனமானவை, ஆகவே அவரைக் கணக்கெடுக்க வேண்டாம் எனக் கூறினார். இதனால், அரசியல் மட்டங்களிலும் கூட அவர் அந்நியப்படுத்தப்பட்டார். ஆதரவு பெருகவில்லை.

சுந்தரலிங்கம் 1915 இற்கு முன்பிருந்தே லண்டனில் வாழ்ந்தமையால் அந்த நாள்களிலேயே இராமநாதனின் அறிமுகம் இருந்தது. பின் இலங்கையின் மாற்று நிர்வாகத்துக்கு அருணாசலத்தின் தலைமையில் ஒரு குழு லண்டனுக்கு, காலனியின் காரியதரிசிகளைச் சந்திக்கச் சென்றபோது எவ்.ஆர் சேனநாயக்கா, சேர். எச்.எம்.பெர்ணான்டோ, டி.பி.ஜயதிலகா போன்ற முக்கிய சிங்கள தலைவர்களுடன் அறிமுகமாகி, இலங்கை சுதந்திரம் பெறுவதில் இவர்களுடன் இணைந்து பணியாற்றினார். அப்பொழுதெல்லாம் தமிழர் உரிமைகளை அவர் பெரிதாகப் பொருட்படுத்தியவரல்லர்.

பின்னாளில் டி.எஸ். சேனநாயக்காவின் மந்திரி சபையில் இணைந்து பணியாற்றியும், தனது கணித மேதாவித்



அடங்காத் தமிழன் பேராசிரியர் ஸி.சுந்தரலிங்கம்

தனத்தினால் தான் டி.எஸ். சேனநாயக்காவிற்கு எப்படி தனிச்சிங்கள அமைச்சரவை அமைக்கலாம் எனப் புத்தி சொன்னார் என்று அவர் பெருமை பீத்துவதும் உண்டு. தனதும் தனது சகோதரர்களினதும், படிப்பு, உயர் பதவிகள், கௌரவங்கள் பற்றியும், இருக்கக் கூடிய தொடர்புகளை ஒட்டியும் பேசுவதிலும் ஒரு வித அகங்காரம் தொனித்தவர்.

அதேசமயம் தமிழர் ஒற்றுமை பேசியவர். செல்வாநயகத்துக்கு எதிராகப் பிரசாரங்களில் 'உங்களுக்கு சிலுவை வேண்டுமா? அல்லது வேல் வேண்டுமா?' – எனக் கேட்டமையும், தமிழரசுக்கு ஆதரவாக பிரச்சாரங்கள் செய்தவேளையில் 'மற்ற இடங்களில் அவர்களைத் தேர்வு செய்யுங்கள்; ஆனால் யாழ்ப்பாணத்தில் பொன்னம்பலத்தையே வெற்றி பெறவையுங்கள்!' என்ற அவரது அடங்காத் தன்மை மூர்க்கமாகப் பார்க்கப்படாவிட்டாலும், நிலையற்ற முரண்களாகவே மக்களால் பார்க்கப்பட்டது.

தமிழ் மக்கள் பயணிக்க வேண்டிய பாதையில் 1960 இல் இருந்து தெளிவாகவே இருந்தார். 'கூட்டுறவு', 'சமஷ்டி', 'சுயாட்சி' என்பவையெல்லாம் பிரயோசனமானவை அல்ல. அவற்றை சிங்களவரோடு பேசி எடுத்தாலும் நடைமுறைக்கு அவை ஒத்துவரா என்பதில் திண்ணமாக இருந்தார்.

பின்னாள் அரசியலில் அவர் வவுனியாவில் பட்டினசபைக்குப் போட்டியிட்ட போது, "யாழ் அகற்றுச் சங்கம்' வைத்து பிரசாரம் செய்து, அவரைத் தோற்கடித்தார்கள்.

இவ்விதமான பிரதேச வாதங்கள் எழுப்பப்பட்டமை வவுனியா மண்ணின் மைந்தன் ஒருவருக்குக் கட்சி நியமனம் தரப்பட வேண்டுமென்பதற்காகத்தான்.

(வளரும்)



இலங்கையின் முதல் அமைச்சரவையில் ஸி.சுந்தரலிங்கம் இடது கோடியில் நிற்கிறார். அருகில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா. நடுவில் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா.

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** முன்னைய ‘தினபதிப்’ பத்திரிகையின் ஆசிரியர் மறைந்த எஸ்.ரி. சிவநாயகம் அவர்கள் பற்றிய உங்களின் கவிதைகளைப் பல பத்திரிகைகளிலும் பார்க்க முடிந்தது. யாரேனும் கேட்டுக் கொண்டதற்காக ஒப்புக்கு அக்கவிதைகளை எழுதினீர்களா? அல்லது அவருக்கும் உங்களுக்கும் உண்மையிலேயே ஏதாவது தொடர்பு இருந்ததா?

**பதில் : -** நன்றாகக் கேட்டீர்கள் போங்கள்! அவை நான் ஒப்புக்கு எழுதிய கவிதைகள் அல்ல. நான் உண்ணும் உப்புக்காய் எழுதிய கவிதைகள். ‘உப்பிட்டவரை உள்ளளவும் நினை’ என்று நம் பெரியவர்கள் சும்மா ஒன்றும் சொல்லவில்லையாக்கும். இன்றைக்கு, எனக்கும் கம்பன் கழகத்திற்கும் கிடைத்திருக்கிற வாழ்வு நாங்கள் உருவாக்கிக் கொண்டதொன்றல்ல. அது பல பெரியவர்களால் எமக்குப் பிச்சையாகப் போடப்பட்டது. அப்படி எங்கள்மேல் அன்பு கொண்டு எங்களை வளர்த்தவர்களில் மறைந்த எஸ்.ரி. சிவநாயகம் ஐயா அவர்களும் முக்கியமான ஒருவர். அவருக்கும் எங்களுக்குமான தொடர்பு பற்றி எழுதுவதானால், தொடர் கட்டுரைதான் எழுதவேண்டும். நீங்கள் கேட்டதால் அத்தொடர்பு பற்றி முடிந்த வரை சுருக்கமாய்ச் சொல்கிறேன்.

படித்துக் கொண்டிருக்கும்போது நானும் என் நண்பர்களுமாக யாழில் 1980 இல் கம்பன் கழகத்தைத் தொடக்கினோம். அப்போதெல்லாம் எங்களை



ஒருவருக்கும் தெரிந்திருக்கவில்லை. 1981 ஜனவரியில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் மாபெரும் தமிழாராய்ச்சி மாநாட்டினை மதுரையில் நடத்தினார். அந்த விழாவிற்கென நம் நாட்டிலிருந்து செல்வாக்குப் பெற்ற பலரும் கலந்து கொண்டார்கள். எங்கள் ஆசிரியர் வித்துவான் வேலன் அவர்களின் தூண்டுதலால் அந்த விழாவைச் சென்று பார்க்கவேண்டும் என ஆசைப்பட்டோம். எங்களை ஒருவரும் திரும்பித்தானும் பார்க்கவில்லை.

திடீரெனத் தோன்றிய ஒரு எண்ணத்தால், ‘உங்கள் விழாவைப் பார்க்க இளைஞர்களாகிய எங்களுக்கும் வாய்ப்புத் தாருங்கள்’ எனக் கேட்டு எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நானும் நண்பர் குமாரதாஸனுமாய் ஒரு கடிதம் வரைந்தோம். முதலமைச்சர் தமிழ்நாடு என வெறுமனே முகவரியிட்டு நாம் அனுப்பிய அக் கடிதம் எம்.ஜி.ஆரின் பார்வைக்குச் செல்லும் என்று நாம் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. ஆச்சரியமாக ஒரே வாரத்தில் முதலமைச்சரின் செயலாளரிடமிருந்து பதில் வந்தது.

விழாவில் கலந்து கொள்ளவென எங்களில் பத்துப் பேருக்கு அழைப்பு அனுப்பியிருந்தார்கள். அப்போது கழகத்தில் பத்து உறுப்பினர்கள் கூட இருந்திருக்கவில்லை. ஒரு மாதிரியாக நண்பர்கள் சிலரைச் சேர்த்துக் கொண்டு அவ்விழாவில் கலந்து கொண்டோம். அதிஷ்டவசத்தால் தற்செயலாக அவ்விழாவில் எம்.ஜி.ஆருக்கு முன்பாக பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. கடவுள் என்னையும் கழகத்தையும் உலகத்திற்கு அறிமுகம் செய்வதற்காய் வந்த வாய்ப்பு அது.

அம்மேடையில் நான் பேசிமுடிந்ததும் எம்.ஜி.ஆர். என்னை அருகில் அழைத்துப் பாராட்டினார். தமிழ்நாட்டில் நான் முதலில் அறிமுகமான மேடை அது. அப்போது எனக்கு வயது 24. நானும் எனது பெருமையை என்னைவிட ரசித்த நண்பர் குமாரதாஸனும் மகிழ்ச்சியின் எல்லை தொட்டோம். அவ்விழாவில் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கமும் சகாக்களும் கலந்து கொண்டார்கள். அவர்கள் ஒரு பத்திரிகைப் பேட்டியில் அறிஞர் கருணாநிதிக்கு முக்கியப்படுத்தி பேட்டி அளித்திருந்தார்கள். அதனால் கோபப்பட்டிருந்த எம்.ஜி.ஆர். நான் பேசியதைத் தொடர்ந்து மேடையேறி ஈழத்தமிழர்களைத் தாக்கி பேச, நம் போராட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியிருந்த அக்காலத்தில் அப்பேச்சு ஈழத்தில் பெரிய எதிர்ப்பலைகளைக் கிளப்பிற்று.

சந்தர்ப்பவசத்தால் நிகழ்ந்த சிறு தவறால், பேசியது குமாரதாஸன் என்றும் எங்களை அங்கு கைது செய்தார்கள் என்றும் பரவலாக பொய்ச்செய்திகள் வெளிவர நாங்கள் அப்போதைய பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தோம். அன்று நான் அங்கு பேசியபோது சபையில் எஸ்.ரி. சிவநாயகம் ஐயா அவர்கள் இருந்திருக்கிறார். அவருக்கு என் பேச்சு பிடித்துப் போக என்னை உயர்த்துவது என்று அவர் முடிவு செய்துவிட்டிருக்கிறார். ஆற்றலாளர்களை இனங்கண்டு வளர்ப்பதில் எஸ்.ரி.எஸ்.ஐயா அவர்களுக்கு நிகரானவர்கள் பத்திரிகைத் துறையில் இன்றுவரை வேறு எவரும் இல்லையென்றே சொல்லலாம்.

இலங்கை திரும்பியதும் நடந்த உண்மைகளைக் கடிதம் மூலம் எல்லாப் பத்திரிகைகளுக்கும் அறியத்தந்தோம். எல்லாப் பத்திரிகைகளும் எங்கள் பதிலை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. எஸ்.ரி.எஸ். ஐயாவின், பத்திரிகையில் மட்டும் அச்செய்தி வெளியிடப்படவில்லை. உண்மையைத் தெரிவித்தும் அதை வெளியிடாத ‘தினபதி’யின் மீது எங்களுக்குக் கடுங்கோபம். எங்கள் அதிருப்தியைத் தெரிவித்து ஆசிரியருக்கு நான் ஒரு கடிதம் வரைந்தேன். ஓரிரு நாள்களில் ஐயாவிடமிருந்து பதில் வந்தது. ‘நடந்த அனைத்தையும் சபையிலிருந்து நான் பார்த்தேன். நடந்து முடிந்த மாநாடு பற்றி ‘மாமதுரைச் சீமையிலே தேமதுரத் தமிழோசை’ எனும் தலைப்பில் ‘சிந்தாமணி’யில் தொடர் கட்டுரை எழுதப் போகிறேன். அக் கட்டுரையில் சுவைபட உண்மைகளை வெளிப்படுத்துவேன்’ என்று பதில் எழுதியிருந்தார். எழுதியது போலவே மிகச் சுவாரஸ்யமாய் எழுதப்பட்ட அக்கட்டுரையில், அப்போது முகமே தெரியாதிருந்த என்னை எங்கோ உயர்த்தி வைத்து அறிமுகம் செய்திருந்தார்.

அந்தக் கட்டுரை பத்திரிகையில் வெளிவந்த அன்றுதான் நானும் நண்பர் குமாரதாஸனும் தமிழ்நாட்டில் படிப்பதற்கென்று விமானத்தில் பயணித்தோம். விமானத்தில்தான் அக்கட்டுரையைப் படித்தேன். அந்தக் கட்டுரையில், எதிர்காலத்தில் இவர்களாலும் இவர்களின் கழகத்தாலும் நம் நாடு பெருமை கொள்ளப்போகிறது என்ற வகையில், எம்மைப் பற்றி ஐயா எழுதியிருந்த வார்த்தைகள் கண்ணீரை வரவைத்தன. உடனேயே தமிழ்நாட்டில் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தும் அதை நிராகரித்து விட்டு மீண்டும் கழகம் நடத்தும் முடிவோடு யாழ் வந்து சேர்ந்தோம். அதனால் எங்கள் இல்லங்கள் கொந்தளித்தன. அவற்றைப் புறக்கணித்து நின்று பிடித்ததால்த்தான் எமக்கும் கழகத்திற்கும் இன்றைய பெருமை சாத்தியமாகியிருக்கிறது. ஐயாவின் எழுத்து என் மனதை மாற்றியிருக்காவிட்டால் நானும் ஒரு சாதாரண பட்டதாரியாய் இன்று காலங்கழித்துக் கொண்டிருந்திருப்பேன். தன் கட்டுரையால் என் வாழ்க்கையைத் திசை திருப்பி இன்றைய வாழ்வை எனக்கு உபகரித்தவர் எஸ்.ரி.எஸ். ஐயா அவர்கள்தான்.

அதன் பிறகு எங்களைக் கொழும்புக்கு அழைப்பித்து கொழும்பில் கம்பன்விழா ஒன்றினை நடத்தத் தூண்டியதோடு புங்குடுதீவு மயில்வாகனம் எனும் வர்த்தகரிடம் 5,000 ரூபா பணமும் வாங்கித் தந்து துணைபுரிந்தார். அப்போது அமைச்சராக இருந்த தன் நண்பரான இராஜதுரை அவர்களையும் அவ்விழாவில் கலந்து கொள்ளவைத்தார். தனது செல்வாக்கால் அந்த கம்பன்விழாவை உயரத் தூக்கி வைத்து உலகிற்குக் காட்டினார். அந்த விழாவில் கலந்து கொண்ட எனது குருநாதர் பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணரின் பேச்சைக் கேட்டு மயங்கி, எப்போதும் மேடைகளில் ஏற முன்வராத ஐயா அவர்கள் எங்கள் விழாவின் நிறைவு நாளன்று மேடையேறி குருநாதருக்குக் ‘கம்பகலாநிதி’ என்ற பட்டம் வழங்கியதோடு எங்களையும் மனமாரப் பாராட்டினார். பின்னர் யாழிலிருந்து வந்த எங்கள் அனைவருக்கும் அமைச்சரைக் கொண்டு விருந்திடச் செய்தார். அந்த விருந்தின் இறுதியில் என்னையும் குமாரதாஸையும் அருகில் அழைத்து உச்சிமுகர்ந்ததோடு தன் துணைவியாரை அழைத்து. ‘இவங்களும் எங்களுடைய பிள்ளைகள் தான் இவங்களுக்கு நீயும் முத்தம் கொடு’ என்று கூறி அந்த அன்னையின் அன்பையும் எங்களுக்கு ஆக்கித் தந்தார்.

முகமே தெரியாத, முகவரி ஒன்றும் இல்லாதிருந்த இளைஞனான என்னை ஆதரித்து அன்பு செய்த அந்தப் பெரிய மனிதரின் தொடர்பை நினைக்க, அன்றைய நிகழ்வு என் கண்முன் தோன்றி நெஞ்சை உருக்குகிறது. அதனால்த்தான் அவருக்கு எழுதிய கவிதை ஒப்புக்கு எழுதிய கவிதையல்ல உப்புக்கு எழுதிய கவிதை என்று சொன்னேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன்** * சூசூப்பர்! 23 வயதில் எம்.ஜி.ஆருக்குக் கடிதமா? நம்ம ஆள் அப்போதே ஆளுமையாய்த்தான் இருந்திருக்கிறார். எதுக்கும் அஞ்சாத அந்த துணிவுதான் வாரிதியாரின் அடையாளம்.

**2. கேள்வி:-** நீங்கள் சொன்னது போலவே உக்ரையின், ரஷ்ய சண்டை வராமலே போய்விடும்போல் இருக்கிறதே?

**பதில்:-** என்ன சாமி! அது வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? போராட்டக் கால ‘டென்ஷனுக்குள்’ பலகாலம் வாழ்ந்து பழகிவிட்டதால், எங்களில் பலபேருக்கு எங்காவது ஒரு போர் நடக்காதா? என்ற விருப்பம் ஆழ்மனதிற்குள் இருந்து கொண்டேயிருக்கிறது. மக்களிடம் மட்டுமல்ல நம் தலைவர்களிடம்கூட அந்தப் பாதிப்பு இருக்கத்தான் செய்கிறது. அதனால்த்தான் நடைமுறைச் சாத்தியமில்லாத இலட்சியங்களைப் பேசிப் பேசி மக்களை உசுப்பேத்தி புதிய சண்டைக்கு வழி தேடுகிறார்கள் சில தலைவர்கள். இதனை மனநோயின் ஒரு ஆரம்ப அடையாளம் என்கிறார்கள் சில வைத்தியர்கள்.

புலம்பெயர் தமிழர்களில் பெரும்பாலானோருக்கு இந்த மனநோய் பாதிப்பு அதிகம் இருக்கிறது. வேற்று நாடுகளில் பத்திரமாக இருந்து கொண்டு நம்நாட்டில் சண்டை நடந்து கொண்டேயிருக்கவேண்டும் என விரும்பும் அவர்களின் ‘வக்கிர’ச் செயற்பாடுகளின் காரணம் இதுதான். இந்த ‘லிஸ்டில்’ முன்னணியில் இருக்கும் சிலர்தான், ஆஸ்திரேலியாவிலும் கனடாவிலும் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரது கூட்டங்களை முன் நின்று குழப்பினார்கள்.

(09ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# அமெரிக்காவை விட சீனாவே சிறந்தது!



## காரணம் கூறுகிறார் மஹிந்தர்

சீனாவினால் இன்று முழு ஆசியாவும் மாற்றம் பெற்றுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சீன- இலங்கை இராஜதந்திர உறவுகளின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில்-

சீனா நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு நாடு. மேலும் இது ஒரு பெரிய வரலாறு. அந்த மா பெரும் வரலாற்றுக்கு கொன்பியுசியஸின் தத்துவம் உதவியிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

சீன வரலாற்றில் மற்றொரு முக்கியமான விடயம் என்னவென்றால், சீனா ஒரு பெரிய நாடாக இருந்த போதிலும் எந்த நாட்டையும் ஒருபோதும் ஆக்கிரமித்ததில்லை. அதேபோன்று தனது தாய்நாட்டை எந்த அந்நிய சக்திக்கும் அடிபணிய அனுமதிக்கவுமில்லை.

கடந்த காலங்களில், சீனாவைக் கைப்பற்றும் உலக வல்லரசுகளின் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. சீனா தொடர்ச்சியாக ஐக்கிய அமெரிக்காவாக இருப்பதற்கு இன்றுவரை முடிந்துள்ளது. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் 2 ஆயிரம் வருடங்களுக்கு முன்னிருந்தே காணப்படுகின்றன என வரலாறு கூறுகிறது.

பௌத்தம், சர்வதேச வர்த்தகம் மற்றும் கலாசார உறவுகள் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு வளர்ந்துள்ளது. பல்வேறு படையெடுப்புகளைச் சந்தித்து 1949 இல் புதிய சீனா உதயமாகியது. சீனத் தலைவர்களுடன் அரசியல் ரீதியாக உறவுகளைப் பேணுவதற்கு கலாநிதி சுகீஸ்வர விக்கிரமசிங்க நடவடிக்கை மேற்கொண்டார்.

1945 இல் உலக தொழிற்சங்கக் கூட்டமைப்பு நிறுவப்பட்ட தொடக்க விழாவில் கலந்து கொண்டார். அது பாரிஸில் நடைபெற்றது. சீனத் தலைவர்களும் கலந்து கொண்டனர். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான அரசியல் உறவு அங்கிருந்தே கட்டியெழுப்பப்பட்டது.

சீனாவிற்கு விஜயம் செய்த முதலாவது அரசியல் பிரதிநிதிகள் குழுவில் பிலிப் குணவர்தன, எஸ்.டி.பண்டாரநாயக்க, எட்மன் சமரக்கொடி, எஸ்.ஜி.எஸ். ரத்னவீர ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். அதன் பின்னர் இலங்கை - சீனா நட்புறவு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

வண. உடகெந்தவல சிறி சரணங்கர தேரர், குசுமா குணவர்தன, தேஜா குணவர்தன, பீட்டர் கென்மன், எஸ்.டி. பண்டாரநாயக்க உள்ளிட்ட குழுவினரே இதற்கு தலைமை தாங்கினர். இறப்பர் அரிசி ஒப்பந்தம் (1952) நட்பின் மற்றொரு மைல்கல் என்று கூறலாம்.

உண்மையில் 1956 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் போதே நட்புக்கு சிறந்த அடித்தளம் இடப்பட்டது. அமரர் பண்டாரநாயக்க வெளியுறவுக் கொள்கையில் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்தினார்.

சோசலிச அரசுகளுடன் உறவுகளை ஏற்படுத்தினார். இடதுசாரி இயக்கம், தொழிற்சங்க இயக்கம் மற்றும் இளம் மாணவர் இயக்கம் ஆகியவை சீனாவை அங்கீகரிப்பதற்காகவும், சீனாவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்காகவும் பாரிய போராட்டங்களை நடத்தின.

நான் தர்ஸ்டன் கல்லூரியில் மாணவனாக இருந்தபோது அந்தப் பேரணிகளில் கலந்து கொண்டேன். சீனாவுக்கான முதல் தூதுவர் வில்மட் ஏ பெரேரா என்பது எனக்கு நினைவிருக்கிறது. சூரியகாந்தி மலர் வியாபாரத்தில் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

அதன் பிறகு ஏ.பீ. பெரேரா, ரொபர்ட் குணவர்தன, வில்லியம் கொபல்லாவ ஆகியோர் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்தினர். இதன்போது டி.பீ.சுபசிங்க விசேட பங்கு வகித்தார். 1978 இற்குப் பின்னர் சீனா புதிய பொருளாதார உத்திகளைக் கையிலெடுத்தது.

1978 மற்றும் 2010 இற்கு இடையில் மிக விரைவான வளர்ச்சி ஏற்பட்டது. கடந்த தசாப்தத்தில் சீனா இரண்டு புதிய பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. முதலில் புதிய பட்டுப்பாதைத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. இலங்கையும் அதன் ஒரு ஸ்தாபக உறுப்பினர்.

இரண்டாவது திட்டம் தீவிர வறுமை ஒழிப்புத் திட்டம். இதனூடாக 80 கோடி மக்களைக் கடுமையான வறுமையிலிருந்து மீட்டெடுக்க முடிந்தது. உலக வரலாற்றில் இது ஒரு வரலாறு காணாத வெற்றியாகும். இன்று உலகின் மிகப்பெரிய சந்தையாக சீனா உள்ளது.

சீனா ஏற்கனவே உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடாக மாறிவிட்டது. சீனாவால் ஒட்டுமொத்த ஆசியாவும் மாற்றம் பெற்றுள்ளது. சீனா தன்னம்பிக்கையுடன் எழுச்சி பெற்றது. அதேபோன்று நாடுகளுக்கு இடையிலான நட்புறவுடன் சீனா நமது வரலாற்று நட்பு நாடு. அதை நான் இங்கே குறிப்பிட வேண்டும்.

சீனாவின் தற்போதைய ஜனாதிபதி சீ ஜின்பிங் எமது தனிப்பட்ட நண்பரும், அதேவேளை இலங்கையின் நல்ல நண்பரும் ஆவார். இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களில் அவர் எமக்கு உதவுகிறார்.

2012 ஆம் ஆண்டு முதல் சீனா அதிபர் சீ ஜின்பிங், வலுவான தலைமையின் கீழ் புதிய சகாப்தத்தில் நுழைந்துள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சீனாவின் தலைவிதியை மாற்றியமைத்து, இன்று அனுபவிக்கும் வெற்றியை சீனாவுக்கு வழங்குவதற்கும் அவரது தலைமைத்துவம் முக்கிய காரணியாக இருந்தது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இல்லையெனில் இன்று நாம் காணும் சீனா இருந்திருக்காது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 100 ஆவது ஆண்டைக் குறிக்கும் வகையிலான விழாவில் ஒன்லைனிலும் பங்கேற்றேன். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது தேசிய மாநாடு 2022 இல் நடைபெற உள்ளது. அது வெற்றியடைய வாழ்த்துவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

சீன - இலங்கை இராஜதந்திர உறவுகளின் 65 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நினைவு நாணயம் ஒன்றையும் வெளியிட்டோம்.

எங்கள் நட்பின் அடையாளமாக அதைச் செய்தோம். சீனா ஒவ்வொரு முக்கியமான தருணத்திலும் இலங்கையுடன் நட்புறவுடன் இருந்து வருகிறது. சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவைத் தொடர்ந்து வலுப்படுத்துவது எமது எதிர்பார்ப்பும் பொறுப்புமாகும் என பிரதமர் தெரிவித்தார்.

# சிறுவர்கள் தொடர்பான குற்றச்சாட்டு கனடாவில் தமிழர் ஒருவர் கைது!



2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சிறுவர் ஆபாசப் படங்களை வைத்திருந்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு கனடாவில் கைது செய்யப்பட்ட தமிழர் ஒருவர் தற்போது கூடுதல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டு ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 33 வயதான கார்த்திக் மணிமாறன் என்பவருக்கு எதிராகவே இவ்வாறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2020 டிசெம்பரில் விட்பி பகுதியில் உள்ள வீட்டில் சோதனை மேற்கொண்டதைத் தொடர்ந்து டர்ஹாம் பொலிஸார் சிறுவர் ஆபாசக் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். மேலும், இதன் போது பல்வேறு மின்னனு சாதனங்களைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

அமெரிக்காவின் உதவியுடன் உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை, புலனாய்வாளர்கள் பாதிக்கப்பட்ட 12 குழந்தைகளை அடையாளம் கண்டுள்ளனர் என்று டர்ஹாம் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்க அதிகாரிகள் பாதிக்கப்பட்ட அனைவரையும் கண்டுபிடித்துள்ளனர் மற்றும் அவர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்டவர் 2020 ஆம் ஆண்டில் ஸ்னாப்சாட், டிக்ரொக், ஒமேகிள், லைக் மற்றும் கிக் மெசஞ்சர் உள்ளிட்ட பல ஒன்லைன் பயன்பாடுகளைப் பயன்படுத்தினார் என அதிகாரிகள் கூறுகின்றனர். டர்ட்போய், டர்டிபோய், டாடி டர்ட்டி, வைரஸ் ரெட் பீஸ்ட் மற்றும் ராக்ஷான் ராக் உள்ளிட்ட பெயர்களைப் பயன்படுத்தி ஒன்லை னில் செயற்பட்டுள்ளார்.

மணிமாறன் மீது முதலில் 2021 ஆம் ஆண்டு சிறுவர் ஆபாசப் படங்கள் வைத்திருந்தமை, குழந்தைகளின் ஆபாசத்தை அணுகியமை மற்றும் குழந்தைகளின் ஆபாசப் படங்களை விநியோகித்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இந்நிலையில், அவருக்கு எதிராக தற்போது கூடுதல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, சிறுவர்களின் ஆபாசப் படங்களுடன் மிரட்டி பணம் பறித் தல், மிரட் டல், விடுத்தல், குற்றவியல், துன்புறுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

கார்த்திக் மணிமாறனால் பல சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் பாதிக்கப்பட்டு இருக்கலாம் என்றும் அவர்கள் தயக்கம் இன்றி முன்வந்து தகவல்களை வழங்க வேண்டும் என்றும் பொலிஸார் தற்போது கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

# வெள்ளைவான் கடத்தல் கல்முனையில் முயற்சி?

## சாணக்கியன் குற்றச்சாட்டு



கல்முனையில் வெள்ளை வான் கடத்தல் முயற்சி இடம்பெற்றதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் டுவிட்டர் பதிவொன்றையும் இட்டுள்ளார்.

அரச புலனாய்வாளர்கள் எனத் தங்களை அடையாளப் படுத்திக்கொண்ட இனந் தெரியாத நபர்கள் இளைஞர் ஒருவரை வெள்ளைவானில் கடத்திச்செல்ல முயற்சித்தனர் எனக்குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் பிரிவு துணைச் செயலாளரான நிதான்ஷான் என்ற இளைஞரையே இவ்வாறு இனந்தெரியாத நபர்கள் கடத்திச் செல்ல முயற்சித்தனர் என சாணக்கியன் வெள்ளை வானின் படம் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

# யாழில் பூசாரி வீட்டில் திருடிய மூவர் கைது!



யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் அமைந்துள்ள பூசகர் ஒருவரின் வீட்டில் பட்டப்பகலில் வீடுடைத்து 24 தங்கப் பவுண் நகைகளைத் திருடிய குற்றச் சாட்டில் மூன்று பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப் படையில், வேலணையில் உள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் அடகு வைக்கப்பட்ட நிலையில் திருட்டு நகைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம்பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், வேலணையைச்சேர்ந்த 24 வயதுடைய பிரதான சந்தேகநபர் கஸ்தூரியார் வீதியில் வைத்து யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பிரதான சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் வேலணையைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரும், சுன்னாகத்தைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரும் எனமேலும் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

பிரதான சந்தேகநபர் போதைப்பொருளுக்கு அடிமையாகி தொடர்ச்சியாகத் திருட்டு மற்றும் கொள்ளைகளில் ஈடுபட்டு வருகின்றார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## ஈஸ்டர் தாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருவரையும் விடுதலை செய்யுமாறு நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பு சாட்சியம் அழைக்கப்படாது, நீதிபதிகள் குழாமின் ஏகமனதான தீர்மானத்துக்கு அமைய முன்னாள் பாதுகாப்பு செயலாளரும் முன்னாள் பொலிஸ்மாஅதிபரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக தலா 855 குற்றச்சாட்டுகளின் கீழ், மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

# பாட்டும் நானே? .....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் கேள்வியைப் பார்த்தால் உங்கள் மனநிலையிலும் எங்கேனும் சண்டை நடக்கவேண்டும் எனும் ஆசை இருக்குமாற்போல் தோன்றுகிறது. எதற்கும் நீங்களும் ஒரு மனநோய் வைத்தியரைக் காண்பது நல்லது. இனி உங்கள் கேள்விக்கு வருகிறேன்.

உக்ரையின், ரஷ்ய சண்டை கொஞ்சம் ஓய்ந்தாற்போல் தெரிந்தது. ஆனால் கடைசியாய் வரும் செய்தியின்படி அது ஓயவில்லை சாம்பல் பூத்த நெருப்பாய் மறைந்து நிற்பதாய்த்தான் தோன்றுகிறது.

உக்ரையின், ரஷ்ய சண்டை நிகழ்ந்தால் உலகில் பேரழிவு நிகழும் என்பது நிச்சயம். அந்த இரு நாடுகள் மட்டுமல்ல உலகநாடுகள் எல்லாமே அதனால் பாதிக்கப்படும். கடவுளின் கருணையிருந்தால் மட்டும் தான் உலகம் தப்ப வாய்ப்பிருக்கிறது. திடீரென தன் நாட்டு மக்களையும் தூதரக அதிகாரிகளையும் உக்ரையினைவிட்டு வெளியேறச்சொல்லி அமெரிக்கா பின்வாங்கியதால் அந்நாட்டை நம்பி ரஷ்யாவோடு மோதிய உக்ரெயின் தலைவர் மனவிரக்தியுற்று அமெரிக்காவைத் திட்டித் தீர்த்தார் எனச் செய்தி வந்திருக்கிறது.

நம்ப வைத்து கழுத்தறுக்கும் அமெரிக்காவின் பட்டியலில் ஆப்கானிஸ்தானுக்கு அடுத்ததாக உக்ரையின் இடம்பிடிக்கும் போல் தெரிந்தது. ஆனால் கடைசியாய் வந்த செய்திகளின்படி மீண்டும் அங்கு போர் மேகங்கள் சூழ்வதாய்த்தான் தோன்றுகிறது. சோவியத்யூனியனின் உடைவுக்குப் பின் இழந்திருந்த வலிமை மிக்க உலகத் தலைமையை மீட்டெடுப்பதில் ரஷ்யத் தலைவர் 'புடின்' காட்டும் உறுதி வியக்கவைக்கிறது. ஐரோப்பிய நாடுகளின் முழு மனதான ஆதரவைப் பெற முடியாவிட்டால் அமெரிக்கா பின் வாங்கவேண்டியதுதான். அங்கு போர் வருமா? என்று கேட்பதை விட்டுவிட்டு அது வரக்கூடாது என்று பிரார்த்தியுங்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன்** * அப்ப அங்க போர் வராதுங்களோ.... ஹி..ஹி.. ஹு.. ஹு.. எட்றா அலவாங்க அமெரிக்காவுக்கு ஒரு அடி போடுவம். (எனக்கும் மனநோயுங்கோ!)

**3. கேள்வி:-** டான் ரி.வியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் புதிய பேட்டியைப் பார்த்தீர்களா?

**பதில்:-** பார்த்தேன்! சொல்வதானால் நிறையச் சொல்லவேண்டிவரும். அப்பேட்டியைப் பார்த்தபோது மனதில் எழுந்த சில விடயங்களை மட்டும் கீழே குறிப்பிடுகிறேன்.

★பேட்டி எடுக்கும் இளைஞர்கள் அரசியல் அறிவு, தர்க்க அறிவு, உலக அறிவு என்பவற்றோடு மிகக் கூர்மையாய் இருக்கிறார்கள். அதனால் டான் ரி.வி 'ஸ்பொற்லைட்' நிகழ்ச்சிக்குப் பேட்டி கொடுக்கப் போகும் தலைவர்கள் சற்று எச்சரிக்கையாய் இருப்பது நல்லது.

★உணர்ச்சி வேகத்தில் சிறிதரன் முன்னுக்குப்பின் முரணாக பல விடயங்களைப் பேசினார். அவரின் உணர்ச்சிகளுக்கு ஆளாகாமல், முரண்பட்டு அவர் பேசிய போதெல்லாம் அவ் இளைஞர்கள் அவரைத் தெளிவாக ஆங்காங்கு சிறைப் பிடித்துத் திணற வைத்தார்கள்.

★13 ஆம் திருத்தச் சட்டத்தை வலியுறுத்துவதைப் பற்றிய சிறிதரனின் கருத்துக்களில் நிறையக் குழப்பம்.

★மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவராய் வளர்ந்துவரும் சிறிதரன், அப்பேட்டியில் ஒற்றுமையீனத்தை வெளிப்படுத்திப் பேசிய விடயங்கள் அவருக்கும், அவர் கட்சிக்கும் ஏன் நம் இனத்திற்கும் கூட உகந்ததாய்ப் படவில்லை.

★இந்தியாவையும் சர்வதேசத்தையும் சிறிதரன் நம்புகிறாரா? இல்லையா? என்பதில் பெரிய குழப்பம்.

★கூட்டமைப்பினதும், தமிழரசுக்கட்சியினதும் தலைவர்களை இம்மியளவும் சிறிதரன் மதிப்பதாய்த் தெரியவில்லை. அது ஏன்? இப்போதும் பிரபாகரனைத் தான் அவர் தன் மனதில் தலைவராக வைத்திருக்கிறாரா? பிரபாகரனின் தலைமையை இவரால் இப்படி விமர்சித்திருக்க முடியுமா?

★பிற்காலத்தில் சம்பந்தனின் தலைமை மாறி வேறு ஆளுமையான தலைமை வந்தால், சிறிதரனின் இம் மனநிலையால் அவர் தனிமைப்பட வாய்ப்பிருக்கிறது.

★காலமாற்றத்தால் கருத்து மாற்றம் நிகழ்வதை சிறிதரன் ஏற்க மறுக்கிறார். பிரபாகரன் உட்பட அனைத்துத் தலைவர்களுமே காலமாற்றத்தால் கருத்து மாற்றம் அடைந்ததை சிறிதரன் எப்படி மறுக்கப் போகிறார்?

★வீதியில் இறங்கிப் போராட வேண்டும் என்கிறார் சிறிதரன், அதனை இன்றுவரை அவர் செய்யாதிருப்பதன் காரணம் என்ன?

★இஸ்லாமிய 'அபாயா' பிரச்சினையில் அனைவரையும் சமாளிக்க நினையாமல் நேர்மையாய் அவர் பதில் சொன்னவிதம் பாராட்டும்படியாய் இருந்தது.

★அவசியம் ஏற்பட்டால் ஒழிய கூட்டமைப்புத் தலைவர்கள் பேட்டிகளைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

**உலகநாதரின் ஒப்பீனியன்** * 'நுழலும் தன் வாயாற் கெடும்'

# வடக்கில் மலேரியா பரவும் பேராபத்து!

யாழ்ப்பாணம், பெப்.19

வடக்கு மாகாணத்தில் தற்போது மலேரியா நோய் பரவும் அபாயத்தில் உள்ளது எனச் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

நான்கு வார காலத்துக்குள் 4 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒரு நோயாளரை அடையாளம் காண்பதன் மூலம் அது ஆயிரம் நோயாளர்களின் ஆரம்பமாக அமையும் என்று சுகாதார அமைச்சின் மலேரியா நோய் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

இந்த நான்கு நோயாளர்களும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பதிவாகியிருக்கின்றனர் அவர் கூறினார்.

இந்த நோய் பரவும் அபாயம் இருக்கின்றது எனக் குறிப்பிட்ட அவர், ஏனைய மாவட்டங்களில் இந்த நோய் பரவும் அபாயம் நிலை இருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி 2 நோயாளர்கள் யாழ்ப்பாணத்தில் பதிவாகியினர். இதன் பின்னர் இரண்டு வாரங்களில் மேலும் இருவர் அடையாளம் காணப்பட்டனர். 4 வார காலத்துக்குள் யாழ்ப்பாணத்தில் 4 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இலங்கை ஒரு சிறிய நாடு. இவ்வாறான நாட்டில் ஒரு பிரதேசத்தில் நோய் அபாயம் நிலை இருக்கின்றது என்பது அது நாட்டுக்கே அபாயம் நிலையாகும்.

இது தொடர்பில் நாம் மகிழ்சியடைய முடியாது. அதாவது ஒரு பகுதியில் மாத்திரம் இந்த அபாயம் இருக்கின்றது எனக் கருத முடியாது. இந்த அபாயம் நிலையில் இருந்து யாழ்ப்பாணத்தை மீட்டெடுப்பதற்காக மலேரியா ஒழிப்பு குழு, சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் அந்த மாகாணத்தின் வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் பாரிய அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.

இந்த வருடத்தில் பதிவான நோயாளர்களின் எண்ணிக்கை 6. இவர்கள் அனைவரும் ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருகை தந்த நோயாளர்கள். இவர்களை நாம் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் வைத்து சிகிசையளித்து நாம் மீட்டெடுத்துள்ளோம்.

6 ஆவது நோயாளர் அநுராதபுரத்தில் ஹபரண பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டார்.

வெளிநாட்டில் இருந்து வந்தவர்களில்தான் இவர் அடையாளம் காணப்பட்டார். இவர் எந்தவொரு நோய் அறிகுறிகளையும் கொண்டிருக்கவில்லை. எமது வைத்தியகுழு இவரை அடையாளம் கண்டது பாரிய வெற்றியாகும்.

இவற்றை நாம் கவனத்தில்கொள்ளாது இருந்தால் மலேரியா நோய் கொண்ட ஒருவர் மூலம் ஆயிரம் நோயாளர்கள் உருவாதற்கு ஆரம்பமாக அமையும். சுகாதார ஊழியர்களின் பணிப்பக்கிஷ்கரிப்புக்களுக்கு இடையிலேயே இந்த நோயாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார் – என்றார்.


## Global NIHR - AF Project, Faculty of Medicine, University of Jaffna

### Post of the Temporary Data Collecting Assistant
### (on Contract Basis)
### Vacant – 08 posts

University of Jaffna, Sri Lanka established a medical research on Global Health Research on Atrial Fibrillation Management Project in partnership with University of Birmingham, UK Funded by National Institute of Health Research (NIHR), UK

**Requirements:**

- 03 passes in G.C.E Advance Level (A/L)
- Preference will be given those who are having experience in the health research related data collection.
- Selected candidates will be appointed as full time on contract basis for **five months**.
- Should be a citizen of Sri Lanka.
- Ability to work in the field of any part of Northern Province, Sri Lanka.
- Age should be not less than 21 years and not more than 35 years.

**Remuneration:** A monthly salary of LKR 30,000.00 (fixed) will be paid. Selected candidates should contribute 8% of the salary towards the Employee's Provident Fund and the employer will contribute 12% of the salary towards Employees' Provident Fund and 3% towards Employees Trust Fund.

Applicants are requested to send the prescribed application form downloaded from the University website along with copies of the Education Certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach the **Country Lead, Global NIHR – AF Project, Department of Community & Family Medicine, Faculty of Medicine, University of Jaffna.** In order to avoid any delay applicant have to submit their application form with the scanned copy of the all relevant documents (mentioned above) through the **E-mail** (afsl@univ.jfn.ac.lk) on or before 02.03.2022.

Incomplete, Illegible applications and applications received after the closing date will be rejected without intimation and **only short- listed applicants** will be called for interview **via zoom**. Zoom Link will be sent it for the short listed applicants via email.

For further details please refer the University of Jaffna website - www.jfn.ac.lk

**Registrar**
**University of Jaffna.**

காலைக்கதிர்
Kalaikkathir

# தனக்கெதிரான போராட்டத்தை தானே ஒழுங்கமைத்தேன் என்று கூறுகின்ற ஒரே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா!



## சுமந்திரன் எம்.பி. சாட்டை

தனக்கு எதிரான போராட்டத்தை தானே ஒழுங்கமைத்தேன் எனச் சொல்லும் ஒரே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே என நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினருடன் வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்பின்னர்ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

அவர் பாவம் அவருக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவதை அவரால் பொறுக்க முடியாமல் அவர் ஏதேதோ பிதற்றிக் கொண்டிருக்கிறார். அதற்கெல்லாம் நாங்கள் பதில் சொல்லி அவருக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மக்கள் ஏன் போராடினார்கள் என்பது மக்களுக்குத் தெரியும்.

மக்களுடைய பிரதிநிதிகளாக நாங்கள் மக்களுடன் சேர்ந்துதான் போராடினோமோ தவிர நாங்கள் போராட்டங்களை ஒழுங்கமைக்கவில்லை. இது முற்றுமுழுதாக மக்களுடைய போராட்டங்களாக நடந்தன.

நாங்கள் மக்களுடன் கூட நின்றோம். தனக்கு எதிரான போராட்டத்தை தானே ஒழுங்கமைத்தேன் எனச் சொல்லும் ஒரே அமைச்சர் இவர்தான். அவர் இன்றைக்கு இப்படிசொல்லுவார், நாளை வேறொன்றைச் சொல்லுவார், அவற்றை எல்லாம் முக்கிய விடயமாக எடுத்துக் கொள்ளக் கூடாது எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன், பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் ச.அரியகுமார் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரயில் தடம் புரண்டமையால் ரயில் சேவை பாதிப்பு

கண்டியிலிருந்து பதுளையை நோக்கி புறப்பட்ட சரக்கு ரயில் ஒன்று வட்டவளை ரொசல்லை பகுதியில் காலை 7 மணியளவில் தடம் புரண்டுள்ளது. இதனால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மேற் படி ரயிலில் பதுளை நோக்கி பய ணித்த பயணிகளும் சிரமங்களுக்குள்ளாகினர்.

ரயில் தடம் புரண்டதன் காரணமாக ரயில் சமிஞ்ஞை கட்டுப் பாட்டு தொகுதிக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி ரயிலை தண்டவாளங்களில் அமர்த்துவதற்காக நாவலபிட்டியிலிருந்து திருத்தும் குழுவினர் வருகை தந்துள்ளனர். எனவே மிக விரைவில் ரயில் சேவை வழமைக்கு திரும்பவுள்ளதாக நாவலப்பிட்டி ரயில் நிலைய கட்டுப்பாட்டு நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## வாகனங்களின் விலை சடுதியாக எகிறியது!

இலங்கையில் வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது முதல் மீளவும் வாகன இறக்குமதி செய்யும் நாள் தொடர்பாக மக்கள் மிகவும் ஆர்வம் காட்டிவருகின்றனர். பயன்படுத்திய வாகனங்களின் அதிக விலையே இதற்குக் காரணம்.

கொவிட் பரவல் தொடங்கியதில் இருந்து பல சந்தர்ப்பங்களில் வாகனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

இதனால் இலங்கையில் பொதுமக்களுக்கு மிகவும் குறைந்த விலையில் கிடைத்த சுசுகி ஆல்டோ காரின் விலை தற்போது 40 லட்சம் ரூபாவாக உயர்ந்துள்ளது. மேலும், பயன்படுத்தப்பட்ட சுசுகி வேகன் ஆர் இன் விலை 60 லட்சம் ரூபாவைத் தாண்டியுள்ளது.

இந்தப் பின்னணியில், மின்சார கார்களின் விலையும் குறைவதாக இல்லை. இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படும் நிசான் லீப் கார் 25 லட்சம் ரூபா முதல் 30 லட்சம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

எவ்வாறாயினும், வாகனங்களை இறக்குமதி செய்யும் வரை நாட்டில் பயன்படுத்தப்பட்ட கார்களின் விலைகள் தொடர்ந்தும் உயரும் என வாகன இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சுசுகி ஆல்டோ - 35 லட்சம் முதல் 40 லட்சம் ரூபா வரை, சுசுகி வேகன் ஆர் - 55 லட்சம் முதல் 60 லட்சம் ரூபா வரை, டொயோட்டா விட்ஸ்- 60 லட்சம் முதல் 70 லட்சம் ரூபா வரை, டொயோட்டா ப்ரிமியோ - ஒரு கோடியே 50 லட்சம் முதல் 2 கோடி ரூபா வரை, டொயோட்டா கரோலா - 50 லட்சம் முதல் 55 லட்சம் ரூபா வரை, டொயோட்டா அக்வா - 60 லட்சம் ரூபா முதல் 65 லட்சம் ரூபா வரை, மைக்ரோ பாண்டா - 25 லட்சம் முதல் 30 லட்சம் ரூபா வரை, டொயோட்டா அலையன்ஸ் - 75 லட்சம் முதல் 80 லட்சம் ரூபா வரை விற்பனையாகின்றன.

## தொலைபேசி அழைப்பால் பறிபோன பல லட்சம் ரூபா!

### யாழ். சித்தங்கேணியில் சம்பவம்

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவர்களை நம்பி யாழ். சித்தங்கேணி மற்றும் சங்கரத்தை துணைவி பகுதிகளைச் சேர்ந்த இருவர் பணத்தை பறி கொடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

சில தினங்களுக்கு முன்னர் சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

அழைப்பினை மேற்கொண்ட மர்ப நபர்கள், அதிஷ்ட இலாபச் சீட்டில் பெருமளவு பணம் கிடைத்துள்ளது. அதனை பெறுவதற்கு ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா பணத்தை இலங்கை வங்கியில் வைப்பிலிடுமாறு கூறியுள்ளனர்.

இதனை நம்பிய அந்தப் பெண்ணும் தன்னுடைய தங்க நகைகளை அடகுவைத்து பணத்தை இலங்கை வங்கியில் வைப்புச் செய்துள்ளார்.

பின்னர் தொலைபேசி இலக்கம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தான் ஏமாற்றப்பட்டமையை அறிந்த பெண் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

இதேபோல் சங்கரத்தை துணைவி பகுதியில் உள்ள ஆண் ஒருவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்ட நபர்கள் வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொதி ஒன்று வந்துள்ளதாகவும், அதனைப் பெறுவதற்கு 60 ஆயிரம் ரூபாவை சம்பத் வங்கியில் வைப்பிலிடுமாறு கூறியுள்ளனர்.

அவரும் பணத்தை வைப்பிலிட்ட பின்னர் அந்த இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்திய நிலையில் அதுவும் துண்டிக்கப்பட்டிருந்தது.

பின்னர் அவர்களும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். இவ்விரு சம்பவங்கள் தொடர்பிலும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இலங்கைப் பெண் ஒருவர் இத்தாலியில் கொலை!

### மகன் கைது

இத்தாலியின் மிலன் நகரில் உள்ள தனது வீட்டில் இலங்கைப் பெண்ணைக் கொலை செய்தார் எனக் கூறப்படும் 25 வயது இளைஞனை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் மகனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னதாக இடம்பெற்றுள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. நாத்தாண்டிய முதுகடுவ பகுதியைச் சேர்ந்த தமயந்தி ரத்நாயக்க (வயது 54) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மின்சாரக் கட்டணங்களை செலுத்தாதோருக்கு எதிராக நடவடிக்கை

மின்சாரக் கட்டணத்தை செலுத்தாத பாவனையாளர்களுக்கு அதற்கான மேலதிக கட்டணத்தை அறவிடுதல் அல்லது அவர்களுக்கான மின் விநியோகத்தை துண்டிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான உத்தரவு வெளியிடப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## கட்டுநாயக்கவிலிருந்து கொழும்புக்கு ரயில்



கட்டுநாயக்கவில் இருந்து கொழும்பு நகரத்துக்கு 40 நிமிடங்களில்பயணிப்பதற்கான ரயில்சேவைக்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைவாக, கட்டுநாயக்க - கொழும்பு ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் இரட்டை ரயில் பாதைகளை அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. இதற்கான ரயிலை உத்தியோகபூர்வமாக சேவையில் ஈடுபடுத்தும் நிகழ்வு போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தலைமையில் இடம்பெற்றது.

இதன்மூலம் கொழும்பு கோட்டையிலிருந்து கட்டுநாயக்க வரை செல்லும் பயணிகளுக்குத் தற்போது 40 நிமிடங்களுக்குள் சென்றடைவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதன்நிர்மாணப்பணிகளுக்கென 444.6 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை களுத்துறை - கொழும்பு, வெயங்கொட - கொழும்பு, அவிசாவளை - கொழும்பு ஆகிய நகரங்களுக்கிடையிலும் இவ்வாறான ரயில் சேவைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் போக்கு வரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி இந்த நிகழ்வின் போது தெரிவித்தார்.

## 10 நிமிடங்களில் 10 லட்சம் ரூபாவை இழந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானிகள் கடந்த வியாழக்கிழமை பத்து நிமிடங்களுக்குள் 10 லட்சம் ரூபாவை இழந்துள்ளது.

இரண்டு வாரங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் நேரத்துக்கு வேலை என்ற தொழிற்சங்க நடவடிக்கையால் இந்த இழப்பைச் சந்தித்துள்ளது.

வியாழக்கிழமை காலை 9 மணியளவில் பாகிஸ்தானின் கராச்சி நகருக்குப் புறப்படவிருந்த விமானத்தில் 3,025 கிலோ கிராம் பெறுமதியான வெற்றிலை பொதியைக் கொண்டு செல்வதை நிராகரித்தமையால் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை விமானிகள் சங்கத்தில் சுமார் 180 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் நிலையில், அவர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கொடுப்பனவில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக குறித்த தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துவருகின்றனர்.

எந்தவொரு விமானமும் ஐந்து முதல் பத்து நிமிடங்கள் தாமதமாகப் பயணிக்கலாம் என்ற நிலையில் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக இந்த வெற்றிலை பொதியை எடுத்து வரும் வரை ஒரு நிமிடமேனும் தாமதப்படுத்த முடியாதெனக் கூறப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.02.2022இல் வெளியிடப்பெற்றது.